பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 06

திங்கட்கிழமை
02 டிசெம்பர் 2024

கார்த்திகை 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



## சாருஜன் சதம்

கொழும்பு, டிசெ.2
19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான ஆட்டத்தில் இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள ☞11

## நாளை கூடுகிறது நாடாளுமன்று

» 03

# உடுப்பிட்டியில் புலிக்கொடி; தீவிர விசாரணை ஆரம்பம்!

### இன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 2
வடமராட்சி, உடுப்பிட்டிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னத்துடன் சுவரொட்டி மற்றும் கொடி பறக்கவிடப் பட்டுள்ளமை தொடர்பில் வல்வெட் டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் ☞11

# பிரபாவின் பிறந்தநாள் நிகழ்வு பொலிஸார் தீவிர விசாரணை!

### சிவாஜிலிங்கம் உட்பட அறுவரிடம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், டிசெ.2
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியமை தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இன்று இது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
வல்வெட்டித்துறை, ஆலடி வீதியில் உள்ள, ☞11

# டிசெம்பர் நடுப்பகுதியில் டில்லி விரைகிறார் அநுர



### முக்கியத்துவம் மிக்க சந்திப்புகளில் பங்கேற்பு
### மீனவர் பிரச்சினை தொடர்பாகவும் ஆராய்வு

**கொழும்பு, டிசெம்பர் 2**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 16ஆம் திகதி டில்லிக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியுள்ளது. ☞11

## மாவீரர்தின வதந்தியை பரப்பிய இருவர் கைது!

கொழும்பு, டிசெ.2
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர் தினப் புகைப்படங்கள், காணொலிகளை சமூகவலைத்தளத்தில் பகிர்ந்து வதந்தி பரப்பி அமைதியின்மையை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் மருதானை மற்றும் பத்தேகமவைச் சேர்ந்த இருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ☞11



### கச்சாய் வீதியில் ஊரெல்லையில்

# அடாத்தாக வெட்டப்பட்ட வாய்க்காலால் சர்ச்சை

### மணல் அகழவும் முயற்சி
### 50 பேர் கொண்ட குழுவால் மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், டிசெ.2
சாவகச்சேரி, கச்சாய் பகுதியில் சட்டவிரோதமாக வெள்ளவாய்க்காலை மூடி அமைக்கப்பட்டுள்ள கட்டுமானத்தைக் தக்கவைப்பதற்காக, மக்கள் பயணிக்கும் பாதையை ஊடறுத்து புதிய வாய்க்கால் ஒன்றை திடீரென அமைத்ததால் அந்தப் பகுதியில் பதற்றநிலை தோன்றியுள்ளது. ☞11

## சிலிண்டருக்கு தட்டுப்பாடு; மக்கள் பெரும் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2
லாப்ஸ் எரிவாயு சிலிண்டரை வாங்குவதற்கு மக்கள் முண்டியடித்ததால் நேற்று பருத்தித்துறை நகரில் பரபரப்பு ☞11

## தலைவர் பிரபாவின் படத்தை பதிவிட்டவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ.2
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் படத்தை பேஸ்புக்கில் பதிவிட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் ☞11

## சுதுமலை விபத்தில் குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ்ப்பாணம், சுதுமலையில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கொக்குவில், தாவடி கிழக்கைச் சேர்ந்த அன்னலிங்கம் செந்தில்குமரேசன் (வயது-64) ☞11




## வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

### வவுனியாவில் கொடூரம்

வவுனியா, டிசெ.2
வவுனியா, ஓமந்தைப் பிரதேசத்தில் நேற்றுமாலை நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இளமருதங்குளம் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. நாவற்குளத்தைச் சேர்ந்த செல்வநிரோஜன் (வயது-41) என்பவரே ☞11

## கொட்டிய மழையால் நெல்லுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, டிசெ.2
அண்மையில் நாடளாவிய ரீதியில் பெய்த மழை காரணமாக அரிசி ஆலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளின் சங்கத் தலைவர் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.
அண்மையில் பெய்த மழையால் ☞11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களை அஞ்சலிப்பது பாதுகாப்புக்கு குந்தகமல்ல!



## பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ. 2**
**வடக்கு- கிழக்கில் உயிர்நீத்த தமது உறவுகளை நினைவேந்தும் நிகழ்வுகளை முன்னெடுத்தமையால் தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற விமானப் படையின் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ். துய்யகொந்த தெரிவித்துள்ளார்.**

அண்மையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இடர் முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு எந்த விதமான தடைகளையும் விதிக்கவில்லை இதனை எமது அரசாங்கம் ஒரு கொள்கையாகப் பிரகடனபடுத்தியுள்ளது.
அதேவேளை, பயங்கரவாதத்தை முன்னிலைப்படுத்தி ஆதரிக்கும் வகையில் செயற்பட்டவர்கள் இனவாத அடிப்படையில் அந்த நிகழ்வை வெளிப்படுத்த விளைந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
அந்த வகையில் வடக்கு, கிழக்கு மக்கள் அமைதியான முறையில் தமது அன்புக்குரியவர்களை நினைவேந்தினார்கள். அதனால் எமக்கு எந்தப் பாதிப்புமில்லை.
ஆனால், தென்னிலங்கையில் அந்த விடயங்களை வெவ்வேறு அரசியல் சுயஇலாபத்துக்காக சிலர் பயன்படுத்த முனைகின்றனர். இது உண்மையில் தேசிய நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.
தற்போதைய நிலையில் தேசிய பாதுகாப்பு உயர்ந்த நிலையில் உள்ளது. அதற்குக் குந்தகம் விளைவிக்கும் எந்த விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை- என்றார். (ச-125)

## தே.மக்கள் சக்திக்கு பெரமுன ஆதரவாம்

கொழும்பு, டிசெ. 2
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
சிங்கள வார இறுதி நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தெளிவான ஆணையை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளனர்.
எனினும் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை நிராகரிக்கும் மக்களின் சார்பில் மொட்டுக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## வெங்காயத்துக்கு பண்டவரி குறைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2
இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு கிலோகிராம் ஒன்றுக்கான விசேட பண்டவரியை மாற்றமின்றி தொடர்வதற்கும் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கான வரியைக் குறைப்பதற்கும் நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.
அதன்படி, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை நடைமுறைக்கு வரும் வகையில் பெரிய வெங்காயம் கிலோவொன்றுக்கான விசேட பண்டவரியை 30 ரூபாவிலிருந்து 10 ரூபா வரை குறைப்பதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.
அதேநேரம், ஒரு கிலோகிராம் உருளைக் கிழங்குக்கான விசேட பண்டவரியை 60 ரூபாவாகப் பேணுவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ச-இ)

## மாவீரரை நினைவேந்தியோர் தண்டிக்கப்படவேண்டியோரே!

### குமுறும் குரல்கள்



கொழும்பு, டிசெ. 2
வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளின் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரன் மற்றும் அந்த அமைப்பின் உறுப்பினர்களைச் சமூக வலைத்தளங்களிலும், பொது இடங்களிலும் நினைவேந்தியவர்களை தற்போதைய அரசு உடன் கைது செய்யவேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சரத் வீரசேகர மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தெரிவித்துள்ளனர்.
ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.
நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியினருக்கு அதிக ஆசனங்கள் கிடைத்தமைக்காக விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த தினத்தையும், மாவீரர் தினத்தையும் பகிரங்கமாக அனுஷ்டிக்கத் தமிழ் மக்களுக்கு அநுர அரசு அனுமதி வழங்கியுள்ளது. மரணித்துப்போன பயங்கரவாதிகளை நினைவேந்த அனுமதி வழங்குவதா தமிழ் மக்களுக்கு அநுர அரசு செய்யும் நன்றிக் கடன். தெற்கிலுள்ள மக்கள் அநுர அரசின் தான்தோன்றித்தனமான இந்தத் தீர்மானத்துக்கு எதிராகப் போராட முன்வரவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)

## தேசியப்பட்டியல் மனோவுக்கு உறுதி

கொழும்பு, டிசெ. 2
தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் உறுதியாகியுள்ளது.
மனோ கணேசன் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோருக்கு தேசியப்பட்டியல் வாய்ப்பை வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது.
எஞ்சிய இரு தேசியப் பட்டியல் ஆசனங்களை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் அடுத்து வரும் ஓரிரு நாள்களுக்குள் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. (ச-இ)




## 'பெங்கால்' புயல் தாக்கம் படிப்படியாக குறைவடைவு


யாழ்ப்பாணம், டிசெ.2
தென்மேற்கு வங்காள விரிகுடாப் பகுதியில் நிலவும் பெங்கால் புயலின் தாக்கம் இலங்கையின் வானிலையில் படிப்படியாகக் குறைந்து வருகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
வடமாகாணத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் வானம் மேகமூட்டத்துடன் தொடர்ந்தும் காணப்படும் என்பதோடு அவ்வப்போது மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.
வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, மத்திய, தென் மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50- 55 கிலோ மீற்றர் வரையான பலத்த காற்று வீசக்கூடும்.
பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை கூடுகிறது நாடாளுமன்றம்!

கொழும்பு, டிசெ. 2

நாடாளுமன்றம் நாளை முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் அசோக ரன்வல தலைமையில் கூடவுள்ளது.



10 ஆவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் சபாநாயகர் தெரிவு, பிரதி சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதி தவிசாளர் தெரிவு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுதியேற்பு என்பன இடம்பெற்றன.

அதன்பின்னர் சபை ஒத்திவைக்கப்பட்ட பிறகு ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை இடம் பெற்றது. அதற்கமைய நாளை முதலே நாடாளுமன்றத்தில் வழமையான நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளன. ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீது முற்பகல் 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை விவாதம் இடம்பெறவுள்ளது. மறுநாள் 4 ஆம் திகதியும் குறித்த விவகாரம் தொடர்பிலேயே முற்பகல் 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை விவாதம் இடம்பெறவுள் ளது. டிசெம்பர் 5 ஆம் திகதி இடைக்கால கணக் கறிக்கை முன்வைக்கப்படவுள்ளது. 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் அது தொடர்பில் விவாதம் நடத் தப்படவுள்ளது.

அதேவேளை, கோப் மற்றும் கோபா உள்ளிட்ட பிரதான குழுக்களுக்கான உறுப்பினர்களின் பெயர் பிரேரிப்பும் இவ்வாறு இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

## கடலுக்குச் செல்வதை மீனவர்கள் தவிர்க்குக

கொழும்பு, டிசெ. 2

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புக்கு அப்பால் உள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பரப்புகளுக்கு மறு அறிவித்தல் வரை செல்லவேண்டாம் என கடற்படை மற்றும் கடற்றொழில் சமூகங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய அபாயம் உள்ளது. சில நேரங்களில் மிக அதிக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். புத்தளத்திலிருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் சுமார் 2.5 - 3.0 மீ. உயரம் கொண்ட கடல் அலைகள் எழக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)


## 12 நகரங்களில் காற்று மாசு

நாடளாவிய ரீதியில் 12 நகரங்கள் மற்றும் பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டிய தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இரத்தினபுரி, கிளிநொச்சி, கம்பஹா, திருகோணமலை, அம்பலாங்கொடை, தம்புள்ளை, காலி, நீர்கொழும்பு, புத்தளம், மஹியங்கனை, குருநாகல் மற்றும் கலாவெவ ஆகிய பிரதேசங்களிலேயே காற்றின் தரம் இவ்வாறு ஆரோக்கியமற்ற நிலையில் காணப்பட்டுள்ளது. காற்றின் தரக் குறியீட்டின்படி, 0-50 நல்லது, மற்றும் 51-100 மிதமானது. அத்துடன், 101-150 இடையே சிறிது சாதகமற்றது என்பதோடு 151-200 என்பது மிகவும் சாதகமற்ற நிலைமையாகும். இதேவேளை 201-300 க்கு இடையே காற்றின் தரம் காணப்படுமாயின் மிகவும் தீங்கு விளைவிக்கும் என்பதோடு, அந்த எண்ணிக்கை 301-500ஆக காணப்படுமாயின் அது ஆபத்தானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

பயங்கரவாத அமைப்புக்கு

## நிதி திரட்டினாரென கிளிநொச்சி நபர் கைது



பிரிட்டனில் பயங்கரவாத அமைப்புக்கு நிதி திரட்டிய குற்றச்சாட்டில் பிரிட்டன் பிரஜாவுரிமையுடைய ஈழத்தமிழர் ஒருவர் கொழும்பு விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். 2009 இல் அவருக்கு எதிராக விதிக்கப் பட்டிருந்த பயணத் தடையின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரிட்டன் பிரஜாவுரிமையை கொண்டுள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த 43 வயது நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இலங்கையிலிருந்து 2009 இல் வெளியேறி பிரிட்டன் பிரஜாவுரிமையை பெற்றிருந்த இந்த நபர் பிரிட்டனில் பயங்கரவாத அமைப்புக்காக நிதி சேகரித்தார், அவற்றை கொழும்பு வன்னியில் உள்ள தனிநபர்களுக்கு வழங்கினார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## குளிர்காய்ந்தவர் தீயில் சிக்கி சாவு

முல்லைத்தீவு, டிசெ. 2

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தீயில் சிக்கி ஒருவர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த 75 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குளிர் காரணமாக வீட்டுக்கு முன்னால் தீ மூட்டியதாகவும், அந்தத் தீ பரவியதன் காரணமாக இந்த இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)




எல்லாரும் ஏறி விழுந்த குதிரையில சக்கடத்தாரும் ஏறி விழுந்த கதை மாதிரிப் போய்க்கொண்டிருக்குது திசைகாட்டிக்காரரின்ர ஆட்சி. அவை ஆட்சிக்கு வரமுதலே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிப்போட்டுத்தான் முதல்வேலை எண்டு எல்லா மேடையிலையும் முழங்கிச்சினம். பிறகு கொஞ்சம் கொஞ்சமா ரியூனை மாத்தி 'அதை நீக்கமாட்டம், ஆனால் சில திருத்தங்கள் செய்வம்' எண்டிச்சினம். ஆட்சியைப் பிடிச்ச பிறகு 'பார்லிமெண்ட் என்ன முடிவெடுக்குதோ அதின்படி தான் நீக்கிறதோ? இல்லையோ? எண்டு முடிவெடுப்பம்' என்று சொல்லுகினம். பார்லிமெண்டில திசைகாட்டிக்காரர்தான் முக்கால்வாசிக்கும் மேல இருக்கினம். அவை ஒரு முடிவெடுத்தால் ஆர்தடுத்தாலும் அதைச் சட்டமாக்கிற பவரும் இருக்கு. அப்பிடியிருக்கேக்க ஏதோ சாத்திரம் பாக்கிற ஆக்கள் மாதிரி 'பார்லிமெண்டின்ர கையில தான் எல்லாம் இருக்கு' எண்டு சொல்லுறது பச்சோந்தி விளையாட்டுத்தான்.

அதை எண்பிக்கிறமாதிரித்தான், இணுவில் பெடியனை கொழும்பில இருந்து வந்த பயங்கரவாத தடுப்பு பிரிவுக்காரர் (ரி.ஐ.டி) அரஸ்ட் பண்ணி இருக்கினம். நேற்றுத் தான் அவரை கோர்ட்ஸுக்கு கொண்டு போனவை. அது மட்டும் தங்கட ஒப்பீஸில வைச்சு ரி.ஐ.டி.காரர் விசாரிச்சிருக்கினம். பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு கீழ அரஸ்ட் பண்ணுற அளவுக்கு அவர் செய்த பிழை என்ன? பேஸ்புக்கில தலைவரின்ர படத்தை போட்டது மட்டும் தான். இதைவிட எவ்வளவோ பிடிக்கவேண்டிய விசயங்கள் இருக்கு. அதுகளை விட்டிட்டு முட்டையில மயிர் பிடுங்கிறமாதிரி இப்பிடி பேஸ்புக்கில தலைவரின்ர படம் போட்டிட்டினம் எண்டு கொழும்பில இருந்து 'ரீம்' வந்து ஆளைத் தூக்கிறதெல்லாம் சரியோ? உதுகளெல்லாம் கோத்தாவின்ர காலத்தோட முடிஞ்சு போட்டுது எண்டு நினைச்சால், திசைகாட்டிக்காரரும் அதே வழியில போய் பொறிஞ்சு கொட்டிண்டப் போயினம் எண்டு நிண்டால் சனம் என்ன செய்யமுடியும்?

இத்தனைக்கும் இணுவில்ல ரி.ஐ.டி.க்காரர் வந்து பிடிச்சுக்கொண்டு போனவருக்கு ரண்டு சின்னப் பிள்ளையள். ரண்டாவது பிள்ளை ஒரு மாதத்துக்கு முதல் தான் பிறந்தது. அப்பிடி ஒரு பச்சைப்பாலகன் இருக்கிற வீட்டுக்க போன வெள்ளிக்கிழமை மத்தியானம் போய் தகப்பனை பிடிச்சுக் கொண்டு போனால் அந்தக் குடும்பம் எவ்வளவு அந்தரப்படும்? அப்பிடி அவசரமா அரஸ்ட் பண்ணுற அளவுக்கு, தலைவரின்ர படத்தைப் போட்டதால உலகம் அழிஞ்ச குற்றத்தையோ அவர் செய்திருக்கிறார்? அப்பிடியெண்டால் 'மாவீரர் தினத்தை கொண்டா டுங்கோ' எண்டு அநுரவின்ர அறிக்கை மாதிரி பேஸ்புக்கில போலிச்செய்தி பரப்பின ஆக்களை யெல்லோ முதல் பிடிச்சிருக்கோணும். அவைக் கொரு சட்டம், இஞ்சையொரு சட்டமோ? 'இந்தமுறை மாவீரர் தினத்தை கொண்டாடவிட்டது பிழை' எண்டு சிங்கள ஆக்கள் சிலர் கெம்புகினம் எண்டதுக்காக, அவையைச் சமாளிக்கிறதுக்காகத் தான் இணு வில்காரரை பலியாடாக்கினவை எண்டும் ஒரு கதை ஓடுது. எல்லாரும் ஆட்சிக்கு வரமுதல் புரட்சி, புனிதம் அது இதெண்டு கதைப்பினம். ஆட்சிக்கு வந்திட்டால் எல்லாரும் ஒரே குட்டை, ஒரே மட்டைதான்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான காரியங்களிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே வீண் வாக்குவாதம் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுச ரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** சிலருக்கு சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும் பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று வேண்டுதலை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**சிம்மம்:** பொறுமையைக் கடைப் பிடிக்கவும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடி இருந்தாலும், சக வியாபாரிகளால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**கன்னி:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க் கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை உங்கள் தேவையறிந்து பண உதவி செய்வார். சிலருக்கு உறவினர் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள். கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும்.

**விருச்சிகம் :** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்து விடுவீர்கள். புதிய முயற்சி களைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. சிலருக்கு வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மகிழ்ச்சி தரும் நாளாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வீர்கள். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்த னையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். பயணத்தின்போது கொண்டு செல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.



## மாவட்டச் செயலருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாவட்டச் செயலக அலுவ லகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்பில் தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பிலும் முன்னெ டுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. (ரி-27)

## சர்வதேச சதுரங்கப் போட்டி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.2

இலங்கை சதுரங்க சம்மேளனம் மற்றும் ஆசிய சதுரங்க சம்மேள னம் ஆகியவற்றின் பூரண ஆதரவுடன் யாழ்.மாவட்ட சதுரங்க சம் மேளனம் நடத்தும் 'யாழ்ப்பாண சர்வதேச சதுரங்கப் போட்டி 2024' நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள செல்வா பலஸ் மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது. இந்தப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

போட்டியில் சுமார் 750 க்கு மேற்பட்ட சதுரங்க வீரர்கள் பங்குபற்று கின்றனர். இவர்கள், இந்தியா, ஐக்கிய ராச்சியம் மற்றும் இலங்கை யின் சகல மாவட்டங்களிலிருந்தும் பங்கேற்கவுள்ளார்.

இந்தப் போட்டியானது யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற இரண் டாவது சர்வதேச சதுரங்கப் போட்டியாகும். (ச-இ)





## அடைமழையால் அச்செழுவில் 70 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

அடைமழை காரணமாக ஜே/279 கிராம அலுவலர் பிரி வுக்குட்பட்ட யாழ்.அச்செழு கொலனிப் பகுதியில் 18 குடும் பங்களைச் சேர்ந்த எழுபது பேருக்கு மேற்பட்டோர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த வெச வெளிக் குளம் மிக நீண்டகாலமாக உரிய வகையில் புன ரமைக்கப்படவில்லை. இதன் காரணமாகத் தொடர் அடை மழை காலங்களில் வீடுகளுக்குள் மழைவெள்ளநீர் உட் புகுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-66)



தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்தின் நிதியுதவியில் வெள்ள அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. காரைநகரிலுள்ள பல பகுதிகளில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே அவை விநியோகிக்கப்பட்டன. (ச-27)

## சிங்கள வகுப்புகள் யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச.2

நாடாளுமன்ற முன்னாள் சபாநாய கர் கருஜெயசூரியவின் வழிகாட்ட லுக்கமைய சூரிய நிறுவகத்தின் நிதி அனுசரணையுடன் யாழ். நகரில் இயங்கிவரும் கற்கை நிலையங்க ளில் அடிப்படை இலவச சிங்கள கற் கைநெறி வகுப்புகள் ஆரம்பமாக வுள்ளன.

கற்கைநெறியில் 16 - 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் பங்கேற்ற முடி யும் எனவும் கற்கைநெறியின் நிறை வில் அரச அங்கீகாரமுடைய சான் றிதழ் வழங்கப்படும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மல்லாகம் கற்கை நிலையத்தில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிலை யில் 0776603563 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

சண்டிலிப்பாய், யாழ். அறிவு மையம் கற்கை நிலையத்தில் சனிக் கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30மணிக்கு ஆரம்பமாக வுள்ள நிலையில் 0771776647 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். வட்டுக் கோட்டை கற்கை நிலையத்தில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணிக்கு ஆரம்பமா கவுள்ள நிலையில் 0776603563 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

யாழ்ப்பாண கற்கை நிலையம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கி ழமை காலை 9மணிக்கு ஆரம்பமா கவுள்ள நிலையில் 0776603563 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம் என அறி விக்கப்பட்டுள்ளது. (ரி-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒரு தேசத்தின் முதன்மையான நம்பிக்கை அதன் இளைஞர்களின் சரியான கல்வியில் உள்ளது.

– டிசிடெரியஸ் எராஸ்மஸ் –


# குறைக்கத் தயக்கம் உயர்த்த ஆர்வம்

எரிபொருள் விலைகளில் தேசியமக்கள் சக்தி அரசாங்கம் மேற்கொண்ட மாற்றம், மக்களிடம் அரசு மீதான அவநம்பிக்கையைத் துளிர்விடச் செய்துள்ளது. இப்போது அரசாங்கத்தில் உள்ளவர்கள் தான், கடந்த அரசாங்கம் எரிபொருள் விலையை உயர்த்திய போது 'எரிபொருள் விலையை இன்னும் நூறுரூபால் குறைக்கலாம். ஆனால் அரசில் உள்ளவர்களின் மோசடிகளால் அந்தச் சுமை மக்களின் தலையில் கட்டப்படுகின்றது' என பொங்கியெழுந்தார்கள். ஆனால் அப்படிப் பொங்கியவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ஓரிரண்டு ரூபா மட்டுமே எரிபொருள் விலையில் குறைப்புச் செய்யப்பட்டதே தவிர, அவர்கள் வாய்ப்பந்தல் போட்டது போல பெரியளவில் எரிபொருள் விலைகளை கீழிறங்கச் செய்யமுடியவில்லை. நேற்று முன் தினமும், இரண்டு ரூபாவால் பெற்றோலின் விலையைக் குறைத்த அரசாங்கம், மண்ணெண்ணெயின் விலையை 5 ரூபாவால் அதிகரித்திருக்கிறது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் நேற்றுமுன்தினம் எரிபொருள் விலைகளில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் மூலம் அரசுக்கு வருமானம் அதிகரித்திருக்கிறது. ஆனால் வீட்டில் விளக்குக்கும், விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் இயந்திரங்களுக்கும், கடற்றொழிலில் ஈடுபடுத்தும் படகுகளுக்கும் மண்ணெண்ணெயை நம்பியிருக்கும் அடித்தட்டு மக்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு லீற்றருக்கும் 5 ரூபாவை மேலதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலை உண்டாகியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி இடதுசாரிச் சிந்தனையின் படி இயங்குகிறது என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், அண்மைக்காலமாக அதுவும் ஆட்சிக்கு வந்தபின்னர் அந்தக் கட்சியின் நகர்வுகள் எல்லாமே முதலாளித்துவ சித்தாந்தத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுவதாகவே புலப்படுகின்றது. அவர்களுக்கு மக்கள் நலனை விடவும், ஆட்சியைத்தக்கவைக்கவேண்டும் என்ற அங்கலாய்ப்பும், சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை மீறினால் பொருளாதார நெருக்கடியால் தாம் 'ததிங்கிணத்தோம்' ஆடவேண்டியிருக்குமோ என்ற பயமுமே முக்கியமானவையாகப்படுகின்றன. எனவே தான் நாணயநிதியத்தைத் திருப்திப்படுத்தவும், திறைசேரிக் கஜானாவை நிரப்பவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ரணில் பின்பற்றிய அதேவழியிலேயே பயணிக்கின்றது. புதிய பொருளாதாரத் திட்டங்களையும், நிதி மூலங்களையும் எட்டுத்திக்கும் சென்று கொண்டுவருவோம் என்று தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளைக் குப்பைக்கூடையில் வீசிவிட்டு, முதலாளித்துவ முகமூடியை அணிந்து கொண்டு மக்களின் வாழ்வாதாரச் சுமையை தேசிய மக்கள் சக்தியினரும் அதிகமாக்கி வருகின்றனர்.

இதுதவிர, மின்சாரக் கட்டணத்தை 36 வீதம் வரை குறைக்கலாம் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு பரிந்துரைத்தபோதும், அந்த மாற்றத்தைக் கொண்டு வருவதில் தேசிய மக்கள் சக்தியினர் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. அவ்வாறு மிகக்கணிசமானளவுக்கு மின்கட்டணம் குறைக்கப்பட்டாலாவது, மிகப்பெரிய ஆறுதலொன்று மக்களுக்கு க் கிட்டும். ஆனால், குறைக்கவேண்டியவற்றைக் குறைக்காமல், கட்டணங்களையும் விலைகளையும் உயர்த்துவதில் மட்டுமே இந்த அரசாங்கமும் ஆர்வமாக இருக்கின்றது. மக்கள் தமக்கொரு மாற்றம் வருமென்று நம்பியே திசைகாட்டிக்கு வாக்களித்து, மகோன்னதமான வெற்றியையும் வழங்கினார்கள். ஆனால் அந்த ஆணையை இந்த அரசாங்கம் இன்னும் புரிந்துகொள்ளவில்லையோ என்ற சந்தேகமே இப்போது ஏற்படுகின்றது. மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு இந்த அரசாங்கம் பரிசளிப்பதென்னவோ தொடர் ஏமாற்றமே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# பலஸ்தீனத்தின் துன்பியலை ஏற்றுக்கொள்ளமுடியாது

## ஜனாதிபதி அநுர கண்டனம்



கொழும்பு, டிசெ.2

**பலஸ்தீன பிரதேசங்களிலும் மேற்கு ஆசியா முழுவதிலும் ஒரு வருடத்துக்கும் மேலாக நீடித்து வரும் போர் காரணமாக நிகழும் பொது மக்களின் உயிர் இழப்புகள், துன்பங்கள் மற்றும் தொடர்ச்சியான அழிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

பலஸ்தீன மக்களுடனான ஐக்கிய நாடுகளின் ஒற்றுமை தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பலஸ்தீன மக்களுக்கு இலங்கை உறுதியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இந்த இக்கட்டான தருணத்தில் ஒருமித்த தீர்மானத்தை எட்டுவதற்கு சர்வதேச சமூகம் பிளவுகளை ஒதுக்கிவிட்டு, பகைமை மேலும் அதிகரிப்பதைத் தடுப்பதற்காக ஒன்றிணைந்த குரலில் ஒன்றுபடவேண்டும் - என்றார். (ச-இ)

# சீரற்ற காலநிலை; உயிரிழப்பு 17

கொழும்பு, டிசெ. 2

நாட்டில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 17 ஆக உயர்வடைந்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதேநேரம், சீரற்ற காலநிலையையடுத்து ஏற்பட்ட அனர்த்தங்களால் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 479, 871 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# தொல்பொருள் தோண்டிய மூவர் கைது

தொல்பொருள்களை தோண்டி எடுக்கும் நோக்கில் சட்டவிரோதமாக அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். வெலிமடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலதொட்டஎல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# பஸ் கட்டணம் மாற்றமில்லை



எரிபொருள் விலை திருத்தப்பட்டுள்ள நிலையில், பொதுப் போக்குவரத்து கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அது பேருந்துக் கட்டணத்தில் தாக்கம் செலுத்தாது. கட்டண திருத்தத்துக்கான சூத்திரத்தின் அடிப்படையில் இம்முறை பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

# யானை தாக்கி பெண் சாவு

கொழும்பு, டிசெ. 2

கலென்பிந்துனுவெவ மஹசென்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காட்டு யானை தாக்கியதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த பெண் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

69 வயதுடைய மஹசென்கம பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார். (ச-இ)

நாளை 03.12.2024
செவ்வாய்க்கிழமை - கார்த்திகை - 18
சுபநேரம் : 10.45 - 12.15
ராகுகாலம் : 03.15 - 04.45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை தடுத்து நிறுத்துங்கள்

## கடற்றொழில் அமைச்சரிடம் பருத்தித்துறை மீனவர்கள் கோரிக்கை!



**யாழ்ப்பாணம், டிசெ.2**

**வடக்கு கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்களை முற்றாக தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் பருத்தித்துறை மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பருத்தித்துறை, கொட்டடிப் பகுதி மீனவர்களது அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் சனிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இந்திய மீனவர்களது எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கை தொடர்ந்து வருவதன் காரணமாக வடக்கு மீனவர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், அதனை தடுத்து நிறுத்த இலங்கை கடற்படையினர் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சுருக்கு வலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களையும் முற்றாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். மீனவர்களது கோரிக்கைக்கமைய கடற்படையினர் ஊடாக இந்திய மீனவர்களது வருகையைக் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் உறுதிமொழி வழங்கினார். (ரி-100)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினால் தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள பொதுமக்களுக்கு சமைத்த மதிய உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ச-66)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.2

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அனுட்டித்து வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது இளஞ்சைவப்புலவர் தேர்வு அல்லது சித்தாந்தப் பண்டிதர் தேர்வு அல்லது பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிடபாசா விருத்திச்சங்கம்) ஏதேனுமொன்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்பபடிவத்தினை இணையத்தில் பெற்று, பரீட்சைக் கட்டணமாக 1200 ரூபாவை இலங்கை வங்கியில், அகில இலங்கை சைவப்புலவர்சங்கம் கணக்கு இல 1133272 இற்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக சைவப்புலவர் சி.கா.கமலநாதன், தலைவர் அகில இலங்கை சைவப்புலவர் , மாசேரி-வரணி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

வங்கிப்பற்றுச்சீட்டு விண்ணப்படிவத்துடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக்கட்டணம் 300ரூபாவுடன் ஜனவரி மாதம் 15ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதற்குப் பிந்திய விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விவரங்களை 0777197067, 0779773538, 0776132176 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். பரீட்சைகள் 2025 ஆம் ஆண்டு சித்திரை மாதம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-45-66)

# யாழ்.மாவட்டச் செயலர் மூளாயில் களத்தரிசிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.2

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மூளாய்க் கிராமங்களுக்கு யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று முன்தினம் சனிக்கிழமை நேரில் சென்று களநிலைவரம் குறித்து பார்வையிட்டார்.

இதன்போது கால்வாய் அல்லது வடிகால் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கண்டறிந்து முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சங்கானைப் பிரதேச செயலாளருக்கு மாவட்டப் பதில் செயலர் பணித்தார். (ரி-66)



# மடிச்சுக்கட்டியின் தாக்கம் கிளிநொச்சியில் வீரியம்



சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் நெல் வயல்களில் மடிச்சுக்கட்டித் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் இந்த ஆண்டு 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தின் கீழான நெற்செய்கையில் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கத்தால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நோய்த்தாக்கம் காரணமாக கடந்த போகங்களிலும் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறையும் இந்த நோய்த்தாக்கம் வீரியம் கொண்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் குறித்த நோயைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Royal College of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
ஆங்கிலத்தில் சுலபமாகக் கதைக்க, இலக்கணம் பயில, தனியாக அல்லது சிறு குழுக்களாக
By: ந. விக்னேஸ்வரன் ஆச்சார்யார், குபேரன் கட்டட மாடி, சங்கானை நகர மத்தி
Tel: 077 675 1649

# அரசியல்வாதிகளின் வழக்கு; துரிதப்படுத்த புதிய முறை

## அநுர அரசு அதிரடி

கொழும்பு, டிசெ. 2

கடந்த அரசாங்கங்களில் மந்தகதியில் விசாரிக்கப்பட்ட முன்னாள் அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்கள், அரச உயர் அதிகாரிகள் தொடர்பான பல வழக்குகள் தொடர்பில் புதிய முறையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உள்ளிட்ட விசேட பொலிஸ் பிரிவுகள் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளன.

கடந்த காலங்களில் பல அரசியல்வாதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுச் சொத்துகளை அபகரித்ததாகவும், லஞ்சம் பெற்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இது தொடர்பான பல வழக்குகள் தற்போது கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் மற்றும் கோட்டை நீதிவான் நீதிமன்றம் உட்பட பல நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

அந்தவகையில் இந்த வழக்குகள் தொடர்பில் புதிய முறையில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்
26.12.1930

ஆண்டவன் அடியில்
14.12.2023

**அமரர் தம்பையா அருள்நேசன் தம்பித்துரை - ஜே.பி**
(அறங்காவலர் யாழ். பஸ்நிலைய ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்)

திதி: துதியை (02.12.2024)

அன்புக்கு இலக்கணமாய் பண்பிற்கு
இளம் பரிதியாய் ஆண்டவனின் பாதார விந்தமாய்
எமக்கு ஆதாரமாய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று போனாலும்
மாண்டு விடவில்லை நீங்கள்
எங்கள் இதயங்களில் மங்காத
திங்கள் போல் வாழ்வீர்கள்

இல.693, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவு ஆற்றாமையுடன்
குடும்பத்தினர்

(es. 1950) (N-1)

## துணுக்காய் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கமைய துணுக்காய் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டு 2024.12.02 ஆம் திகதியிலிருந்து 2024.12.15 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பிரதேச சபையிலும் சபையின் நூல் நிலையங்கள் மற்றும் சனசமூக நிலையங்களிலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

மா.மகாதேவன்
செயலாளர்,
பிரதேச சபை, துணுக்காய்.

(cr.43802) (N-1)

## மரண அறிவித்தல்



**செல்வி சின்னத்தம்பி பாக்கியலட்சுமி**

கரவெட்டிகிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சின்னத்தம்பி பாக்கியலட்சுமி அவர்கள் 29.11.2024, வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், திருமதி ராஜலட்சுமி, அமரர் ரகுநாதன், அமரர் விஜயலட்சுமி, சத்தியநாதன், பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் செல்வநாயகம், அம்புலி தேவி, ஒப்பிலாமணி, சரோஜினி, கௌரி ஆகியோரின் மைத்துனியும், டேவிட் சுதாகர், திவாகரன், சசிகரன், சுஜிதா ஆகியோரின் சிறிய தாயாரும், அரவிந்தன், பிரமிளா, பிரவீனா, நிவேதன், நிவேதிகா, ஷீபா, சாம்சன் ஆகியோரின் அன்பு அத்தையும், யாதுரி, யாக்னவி, அபிநயா, சரண், அக்ஷரன், மானஷி, சர்வீகா, டக்ஷயன், விகாஷினி, விதுரன், வர்சாஜினி, ரிஷிகேசன், வர்ஷிகன், திவ்யன், கிருத்திகா, லியா, லிதியா, ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் இன்று (02.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் நடைபெற்று பூத உடல் வேளுண்டை கட்டைவேலி மெதடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CR/43809) J-1

## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2025

யாழ். மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் 2024 பதிவினை மேற்கொண்டு புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற்கொண்டு, உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 04.12.2024 தொடக்கம் 26.12.2024 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதிக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள் கின்றேன்

- NVQ - in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞராக பதிவுகளினை மேற்கொள்ளலாம்.
- மேற் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைய கடந்த காலங்களில் பதிவினை மேற்கொண்டவர்கள் பதிவுகளைப் புதிப்பித்தல் கட்டாயமானதாகும்.
- பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக யாழ். மாநகர சபையில் தொழிற்பட முடியாது.

**குறிப்பு:**

- படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவ கட்டணம் - ரூபா 118.00 (100.00 + Vat 18%)
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, படவரைஞராக பதிவு மேற்கொள்ளவதற்கு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான கட்டணம் - ரூபா 2360.00 (2000.00 + Vat 18 %)

மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.

(cr.43806) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**அமரர் மாணிக்கர் தாமோதரம்பிள்ளை**



மலர்வு
12.10.1938

உதிர்வு
14.12.2023

திதி: கார்த்திகை துதியை
[02.12.2024]

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்

(es.1097) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 06 . 1946



மறைவு
01 . 12 . 2024

## திரு வேலுப்பிள்ளை-சண்முகநாதன்
(சின்னத்துரை- துறைமுக அதிகாரசபை முன்னாள் ஊழியர் திருகோணமலை)

பிள்ளையார் கோவிலடி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள் நேற்று (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை- தெய்வானைப்பிள்ளையின் இளைய மகனும் திரு திருமதி நன்னித்தம்பி- சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் சிவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் சிவதர்சினி (லண்டன்), குமுதினி (பிரதம உள்ளகக்கணக்காய்வாளர், மாவட்ட செயலகம்,கிளிநொச்சி), திருக்குமரன் ஆகியோரின் தந்தையும் அருந்தவராசா (லண்டன்), நிரஞ்சன் (ஆசிரியர்,யா/செங்குந்தா இந்துக்கல்லூரி), கங்கா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருநாவுக்கரசின் சகோதரனும் பிரணவியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.12.2024 செவ்வாய்க்கிழமை மு.ப. 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலையில் உள்ள செம்மண்வாய்க்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

பிள்ளையார் கோவிலடி,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

தொடர்புகளுக்கு: 00447969689615
077 023 9603,076 144 8306

(CS 1962) P-1

# மரண அறிவித்தல்



## இராஜசேகரம் சிவஞானாம்பிகை

குப்பிளான் வடக்கை பிறப்பிடமாகவும் வவுனியா வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசேகரம் சிவஞானாம்பிகை 28.11.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜசேகரம் (ஆசிரியர், குரும்பசிட்டி பொன்பரமானந்தர் மகாவித்தியாலம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமலிங்கம்-தங்கம்மாவின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்-கனகலட்சுமி ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், சீவரட்னம், சிவசுப்பிரமணியம், திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கமலாம்பிகை, காசிராஜா ஆகியோரின் மைத்துனியும் அஜந்தனி (முன்னாள் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர், அவுஸ்ரேலியா), சிவசேகரன் (இணைப்பாளர், உடற்கல்வி அலகு, வவுனியா பல்கலைக்கழகம்), அனுஷினி (ஆசிரியை வவுனியா விபுலானந்தா கல்லூரி), செந்தூர்சேகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கார்த்திகேயன் (கணக்காளர் அவுஸ்ரேலியா), சரிதாஷினி (ஆசிரியை வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம்), ரூபசிங்கம் (வைத்தியர், சிறைச்சாலை வைத்தியசாலை, வவுனியா), தக்ஷாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விகாஷினி, விஷாகனன், நிகிஷ், ஹரிஷ், சுதிஷ்கா, ஜனிஷ்கா, ஹர்ஷிகா, கேஷாந் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2024) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 743 8318
077 226 9882

193/1, ஸ்ரேசன் வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.

(CS (1961) P-1

# 31 ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நாவிதழும்



மலர்வு : 03.03.1958 உதிர்வு : 03.11.2024

## அமரர். இராசதுரை சந்திரசேகரன்
**திதி: கிருத்திகை-29.07.2024**

**கடந்த 03.11.2024 காலமான எமது குடும்பத் தலைவர் இராசதுரை சந்திரசேகரன் அவர்களின் வீட்டுக்கிருதியை அழைப்பிதழ் நாளை செவ்வாய்க்கிழமை 03.12.2024 அன்று காலை வீட்டுக்கிரியை நிகழ்வுகள் அன்னாரின் வீட்டிலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணியளவில் நல்லூரர் பின் வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். மேலும் அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் பதாகைகள், மலர்வளையங்கள், கண்ணீர் அஞசலி பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்தநன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.**


54/2, சென்.அன்ரனிஸ்
முன்லேன்,
கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குழி.

தகவல் :
குடும்பத்தினர்
077 660 4341

(CS1963) P-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 02 . 1948



மறைவு
01 . 12 . 2024

## முத்தையா நடராஜா

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா நடராஜா நேற்று (01.12.2024) இறைபதம் அடைந்தார்.

அன்னார் பராசக்தியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி, சின்னம்மா ஆகியோரின் இளைய சகோதரனும் நந்தகோபன் (முகாமையாளர் ஹற்றன் நஷனல் வங்கி HNB நிந்தவூர் கிளை), நிதர்சன் (Adshayam Foods - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுசீலா (தாதிய உத்தியோகத்தர்-யாழ் போதனா வைத்தியசாலை), சுபேந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அக்ஷயா, வர்ஷிகன், திதிக்ஷன், பவிஷ்னா ஆகியோரின் அருமைத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2024) பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி மேற்கு வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி

தொடர்புகளுக்கு:
077 418 8597
077 077 4482

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(CR 43812) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பீட்டுத் தொகை போதுமானதல்ல!

கொழும்பு, டிசெ.2

சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் அறிவித்துள்ள இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லையென கமநல அமைப்புகள் தெரிவித்துள்ளன. அதிகளவு பாதிப்பைச் சந்தித்துள்ள 6 வகையான பயிர்கள் தொடர்பில் குறித்த நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக சுமார் 3 லட்சத்து 38 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், நெல், சோளம், உருளைக்கிழங்கு, சோயா, மிளகாய் மற்றும் பெரிய வெங்காயம் போன்ற பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்காக ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ரூபாவுக்கு மேற்படாத தொகை இழப்பீடாக வழங்கப்படும் என விவசாயத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன அறிவித்திருந்தார்.

குறித்த இழப்பீட்டுத் தொகை தமக்கு போதுமானதாக இல்லை . காலநிலை அனர்த்தங்களால் பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை அரசாங்கம் உரிய முறையில் மதிப்பீடு செய்யவேண்டும் எனவும் கமக்கார அமைப்புகள் கோரிக்கையை முன்வைத்துள்ளது. (ச-இ)



# இனவாதத்தை முதலீடாக்கி இனியும் அரசியல் செய்யாதீர்

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.2

இனவாதத்தை இந்நாட்டு மக்கள் நிராகரிக்கின்றார்கள் என்பதையே நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் வெளிப்படையாகப் புரிய வைத்துள்ளது. இனியும் இனவாதத்தை வைத்து அரசியல் செய்யாதீர்கள் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இதுவரை காலமும் இனவாதத்தை முதலீடாகக் கொண்டு பல அரசியல்வாதிகள் தமது அரசியல் பிழைப்பை நடத்தி வந்தார்கள். ஒவ்வொரு தேர்தலிலும் இனவாதிகள் ஒரு முகாமுக்குள் ஒன்றுகூடுவர். அது போன்றே கடந்த தேர்தலில் சரத் வீரசேகர, உதயகம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்ற இனவாதிகள் ஒரு முகாமுக்குள் ஒன்று கூடினார்கள், அவர்களை சிங்கள மக்கள் முற்றாக நிராகரித்தார்கள். அதற்குக் காரணம் மக்கள் இன ஒருமைப்பாட்டுடன் கூடிய எதிர்காலத்தை விரும்புகின்றார்கள் என்பதாகும். 2019,2015 நாடாளுமன்றத் தேர்தல்களில் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ ஆகியோர் தேர்தலிலேயே நிற்க முடியாதளவுக்கு மக்கள் அவர்களுக்குப் பாடம் புகட்டி இருந்தார்கள். ஆனாலும் இவர்கள் இன்னுமின்னும் இனவாதத்தைத் தூண்டுவதிலேயே குறியாக இருக்கின்றார்கள்.

நாய்க்கு எந்த இடத்தில் கல்லடி பட்டாலும் அது காலைத் தான் தூக்குவது போலவே இந்த கடும்போக்குவாதிகளின் குணமும் இருக்கின்றது. அவர்களுக்கு இந்நாட்டில் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. இனவாதத்தை மட்டுமே முதலீடாகக் கொண்டவர்கள் அதை மட்டுமே பேசுவார்கள். அதை வைத்து மட்டுமே அரசியல் பிழைப்பு நடத்துவார்கள். இத்தகைய இனவாதிகளுக்கு நாட்டை முன்னேற்றுவதோ அல்லது நாட்டை பொருளாதாரச் சீரழிவில் இருந்து மீட்பதோ அல்லது ஒற்றுமையான மக்களின் எதிர்காலமோ அவர்களுக்கு அவசியமில்லை. இத்தகையவர்கள் குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிக்க முனைபவர்கள்.

மக்களின் அடிப்படை உரிமைகளை யாராலும் மறுதளிக்கமுடியாது. மக்கள் விடுதலை முன்னணி கார்த்திகை வீரர்கள் என்ற தமது சகாக்களை நினைவு கூர்கின்ற நிகழ்வை அனுஷ்டிக்கின்றார்கள். அதே போன்று தமிழ் மக்கள் அதே கார்த்திகை மாதத்தில் தமக்காக உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்கின்றார்கள். மே மாதத்தில் இறுதிப் போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைவேந்துகின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது?

இதை வைத்துத்தான் இனவாதிகள் தெற்கு மக்களை ஒரு மாயைக்குள் வைத்திருந்தார்கள். அந்த மாயை புதிய அரசு உடைத்திருப்பது வரவேற்கத்தக்கது. மக்களின் உணர்வுகளை மதிக்காத எந்தவொரு ஆட்சியாளரையும் மக்கள் நிராகரிக்கவே செய்வார்கள். இனியும் இனவாதத்தை வைத்து அரசியல் செய்வது சாத்தியமில்லை என்பதை சரத்வீரசேகர, விமல் வீரவன்ஸ, கம்மன்பில போன்ற வகையறாக்கள் புரிந்துகொள்ளவேண்டும்" - என்றுள்ளது. (எ-இ)

## பொது அறிவித்தல்
## மாநகர சபை யாழ்ப்பாணம்

### நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் (வரைவு) - 2025

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் (வரைவு) 2024.12.02 ஆம் திகதி தொடக்கம் 2024.12.15 ஆம் திகதி வரை பொது மக்கள் பார்வைக்காக கீழ்க் குறிப்பிட்ட இடங்களிலும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் உத்தியோக பூர்வ இணையத்தளத்திலும் (Jaffna.mc.gov.lk) பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

- யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம்
- யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ்ப்பாணம் மாநகர சபை - பொது சனத்தொடர்பு பகுதி
- யாழ்ப்பாணம் பொதுசன நூலகம்
- நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

இவ் வரைவினை பரிசீலித்து மேலும் முன்றேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்கள் கருத்துக்கள், முன்மொழிவுகள் இருப்பின் எதிர்வரும் 2024.12.15 இற்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

01.12.2024

ச.கிருஷ்னேந்திரன்,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

70வது பிறந்ததின வாழ்த்து



அரிச்சந்திரா சந்திரகுமாரன்
BSc General Degree
(First Class)
(Dip-in-Edu(Merit Pass)

அன்பும், பண்பும், அறிவும், பணிவும், அமைதியும், இரக்கமும், பாசமும் கொண்ட தாங்கள் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர்:-
உறவினர், நண்பர்கள்.
சந்திரகோட்டம்,
(CS/56766) J-1

சேவை நலன் பாராட்டு

தனது அறுபதாவது அகவையில்
ஆசிரியர் சேவையில் இருந்து இன்று (02.12.2024)
ஓய்வுபெறும் ஆசிரியை



திருமதி
சிறீக்குமரன் பகீரதி
(S.L.T.S - I

அவர்கள் ஓய்வு காலத்தில்
சீரும் சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/ புன்னாலைக்கட்டுவன்
இந்து தமிழ் கலவன் பாடசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தேசியப்பட்டியலால் விரிசல்

கொழும்பு, டிசெ.2

தமது கட்சிகளுக்கு தேசியப்பட்டியல் வாய்ப்பு வழங்கப்படாத பட்சத்தில் உள்ளாட்சிசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைத்துள்ள பங்காளிக் கட்சிகள் அவதானம் செலுத்தியுள்ளன.

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், சுதந்திர சபை மற்றும் சுதந்திரக் கட்சியின் தயாசிறி அணி என்பன ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டன. ஐக்கிய மக்கள் சக்திக்கு ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. அதில் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எஞ்சிய ஆசனங்களை பங்காளிக் கட்சிகள் கோரும் நிலையில், தமது கட்சி உறுப்பினர்களுக்கும் இடமளிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித்துக்கு அழுத்தம் வலுத்துள்ளது. இந்தப் பின்புலத்திலேயே தமது தரப்புக்கு தேசியப் பட்டியல் வழங்கப்படாத பட்சத்தில் உள்ளாட்சி தேர்தலில் தனிவழி செல்வதற்கு பங்காளிக் கட்சிகள் திட்டமிட்டுள்ளன. (ச-44)



# சந்திரிகாவுக்கு மைத்திரி மடல்

கொழும்பு, டிசெ.2

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் வெற்றிக் கட்சியாக முன்னெடுக்கும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மைத்திரி, சந்திரிகாவிடம் எழுத்து மூலம் கோரியுள்ளார்.

கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்காக பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயார் எனவும், தம்மால் தொடுக்கப்பட்ட வழக்கினை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடாத தூய்மையான இளைஞர்களிடம் கட்சியை ஒப்படைக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்தியுள்ளார். கட்சியில் எந்தவொரு பதவி நிலையும் தமக்கு தேவையில்லை எனவும் எதிர்காலத்தில் கட்சியின் உறுப்பினராக இருந்து கட்சிக்கு ஆதரவளிக்கப் போவதாகவும் சிறிசேன தெரிவித்துள்ளார். (ச-இ)


## விற்பனைக்கு

- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட கடை
- யாழ் பலாலி வீதியில் SVM எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணி
- யாழ் பலாலி வீதியில் வசந்தம் பார்மசிக்கு முன்பாக 5 1/2 பரப்பில் அமைந்த மாடிக்கட்டிடம்
- யாழ் பலாலி வீதியில் மக்கள் வங்கிக்கு அருகாமையில் 4 பரப்பில் அமைந்த காணியும் வீடும்

என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 723 2535




அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரத்தில் சீரற்ற காலநிலையால் பாதிப்புக்குள்ளான பொருளாதார நலிவுற்ற குடும்பமொன்றுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத் தகரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினரால் வழங்கி வைக்கப்பட்டது. (ச-66)

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 05 . 1944



மறைவு 24 . 11 . 2024

### திருமதி. சிவராசா இராசம்மா

ஊரெல்லை தெரு, மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா இராசம்மா அவர்கள் 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-தெய்வானபபிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும் செல்லையா-சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவராசாவின் அன்பு மனைவியும் குஞ்சுத்தம்பி (ஜேர்மன்), காலஞ்சென்ற கோபலகிருஸ்ணன், கயிலாயபதி, தங்கராணி, கணேசமூர்த்தி (ஜேர்மன்), கலாவதி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான யோகரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் ஆனந்தராசா, ஞானமலர், சற்குணநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:
சகோதரி - 076 603 6359
076 214 1994

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 07 . 1956



மறைவு 06 . 07 . 2024

### சங்கரப்பிள்ளை சுந்தரலிங்கம்

பாலாவோடை களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும் சிதம்பராமூர்த்தி கேணியடியை தற்காலிய வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சுந்தரலிங்கம் 01.12.2024 (ஞாயிற்றுக்கிழமை) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், விக்கினேஸ்வரியின் (ஈ-சு) அன்புக் கணவரும் திருப்பதியின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஜேசுதாஸ், லீலாவதி, பாலசிங்கம், விஜயரட்ணம் மற்றும் விஜயகுமாரி, கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். சசிரேகா, ரேனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலனின் மாமனாரும் ஆகாஸ், ஆருஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (03.12.2024) செவ்வாய்க்கிழமை பி.ப 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தில்லை மயாணத்தில் எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 894) V-1

# ஐஸ் போதை ஒருவர் கைது

கொழும்பு, பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவலோக வடரவும பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாருஜன்...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாருஜன் சண்முகநாதன் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டம் நேற்று சார்ஜாவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணி சார்பாக அதிகபட்சமாக சாருஜன் 132 பந்துகளில் 102 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 28.2 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அதேவேளை, இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள நியூட்டன் ரஞ்சித்குமார் இரண்டு விக்கெட்டுக்களையும், குகதாஸ் மாதுளன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (எ-இ)

## உடுப்பிட்டியில்...

துள்ள நிலையில், இன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி உடுப்பிட்டிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னத்துடன் கூடிய சில சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன என்றும் மறுநாள் 27ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னத்துடன் கூடிய கொடியொன்றும் பறக்கவிடப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று அவற்றை மீட்டுச் சென்று சான்றுப்பொருளாக்கியதுடன், விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுவரொட்டிகள் மற்றும் கொடியுடன் தொடர்புடையவர்களைக் கண்டறிந்து, சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-26)

## டிசெம்பர்...

16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இந்தியாவில் முக்கியத்துவமிக்க சந்திப்புகளில் ஜனாதிபதி ஈடுபடவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் எனவும், வர்த்தக சமூகத்தினருடனும் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரும் ஜனாதிபதியுடன் டில்லி செல்லவுள்ளனர். மீனவர் பிரச்சினை சம்பந்தமாகவும் இந்தச் சந்திப்புகளில் கலந்துரையாடப்படவுள்ளது. (அ-எ-44)

## சிலிண்டருக்கு...

ஏற்பட்டது. லாப்ஸ் எரிவாயு சிலிண்டருக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில், நேற்றுக்காலை பருத்தித்துறை நகருக்கு லாப்ஸ் எரிவாயு சிலிண்டருடன் விநியோக வாகனம் சென்றுள்ளது. அதை அவதானித்த மக்கள் உடனடியாக எரிவாயு சிலிண்டர்களுடன் விநியோக முகவர்களின் கடைகளில் குவிந்தனர்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எரிவாயு சிலிண்டர்கள் வந்திருந்தநிலையில், மக்கள் பெருமளவில் குவிந்து முண்டியடித்தால் அவற்றை விநியோகிக்க விற்பனை முகவர்கள் திக்குமுக்காடியதைக் காணமுடிந்தது.

சிலர் வெற்று எரிவாயு சிலிண்டர்களுடன் விநியோக வாகனத்தைப் பின் தொடர்ந்து சென்றதையும் காண முடிந்தது. (அ-எ-26-100)

## தலைவர்...

சேர்ந்த இளைஞர் எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம், இணுவிலைச் சேர்ந்த இந்த இளைஞர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இந்த இளைஞர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 4ஆம் திகதிவரை இளைஞரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞரின் சார்பில் சட்டத்தரணி க.சுகாஷ் முன்னிலையாகியிருந்தார். (அ-எ-26-20)

## வாள்வெட்டுத்...

உயிரிழந்தவராவார். மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற இனந்தெரியாத குழு ஒன்று அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது . சம்பவத்தில் காயமடைந்தவரை அங்கிருந்தவர்கள் மீட்டு, வவுனியா மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். ஆயினும் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பத்துக்கான காரணம் தெரியவரவில்லை. இது தொடர்பான விசாரணைகள் ஓமந்தைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-110)

## சுதுமலை...

என்பவரே உயிரிழந்தவராவார். இவர் பிறப்பு, இறப்புப் பதிவாளராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. மானிப்பாயில் இருந்து மோட்டார் சைக்கிளில் செந்தில்குமரேசன் பயணித்தபோது அதேதிசையில் பயணித்த ஒருவருடன் விபத்துக்குள்ளாகி எதிர்த்திசையில் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் செந்தில்குமரேசன் படுகாயமடைந்தநிலையில், அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26-27)

## அடாத்தாக...

இது தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலருக்கு பொதுமக்கள் எழுத்து மூலம் முறையிட்டபோதும், அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கச்சாய் வீதியில் ஊரெல்லை ஒழுங்கையின் ஊடாக வெள்ளநீர் வாய்க்கால் அமைப்பதால் அந்த வீதியைப் பயன்படுத்தும் 150 க்கும் மேற்பட்டவர்கள் சிரமங்களைச் சந்திக்க வேண்டியிருப்பதாகவும் பழைய வாய்க்கால்களை மூடி வீடுகளும், மதில்களும் அமைக்கப்பட்டுள்ள நிலையில், சிலர் தங்களின் சுயலாபத்துக்காக புதிய வாய்க்கால் அமைக்க முயன்று வீதியைச் சேதப்படுத்த முயற்சிக்கின்றனர் எனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்த விடயத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் நேர்மையுடன் செயற்பட்டு, வீதியூடாக வாய்க்கால் வெட்டுவதைத் தவிர்த்து, மாற்று ஏற்பாடுளைச் செய்யவேண்டும் என்றும் அவர்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.

அதேவேளை, இந்தப் பிரச்சினை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள், சட்டவிரோதமாக வெள்ளவாய்க்காலை மூடி அமைக்கப்பட்டுள்ள மதில்கள், கட்டுமானங்களை அகற்ற வேண்டும். தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் திட்டமிடல் பிரிவில் கடமையாற்றும் ஒருவர் வெள்ளவாய்க்காலை மூடி சட்டவிரோதமாக மதில் அமைத்துள்ளார் .அதனாலேயே நீர் வெளியேற முடியாது தேங்கியுள்ளது.

இதேவேளை - புதிதாக நீர்வாய்க்கால் அமைப்பது என்ற போர்வையில் அங்கிருந்து மணலை அகழ்ந்து செல்லவும் முயற்சிக்கின்றனர். 50க்கும் மேற்பட்ட இளைஞர் குழுவொன்றும் இந்த அடாத்தான முயற்சிக்கு பக்கபலமாக அங்கு களமிறக்கப்பட்டுள்ளதால் நாம் பெரும் அச்சத்தை எதிர்கொண்டுள்ளோம் என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (அ-எ)

## பிரபாவின்...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் இல்லத்தில் கடந்த 26ஆம் திகதி பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றிருந்தது. அது தொடர்பான விசாரணைகளே பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் உட்பட ஆறு பேரிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு வாக்குமூலம் வழங்குவதற்காக எம்.கே. சிவாஜிலிங்கம் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் பொலிஸ் நிலையம் வரமுடியாது என்று பதிலளித்திருந்தார். அதையடுத்து நேற்று நண்பகல் 12 மணியளவில் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் இல்லத்துக்குச் சென்ற வல்வெட்டித்துறை பொலிஸார் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர்.

அதேநேரம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பலரிடம் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-26-20-100)

## மாவீரர்தின...

இவர்கள் முன்னைய காலங்களில் எடுக்கப்பட்ட காணொலிகளை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து, அவை இந்த ஆண்டு நடைபெற்றன என்று தெரிவித்து வதந்திகளைப் பரப்பினர் என்று கூறப்படுகின்றது.

பொதுமக்களின் எதிர்ப்பைத் தூண்டுதல், இனமுரண்பாட்டைத் தூண்டுவதற்கு முயற்சித்தல் மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்பின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் விதத்தில் முகநூல் ஊடாக பொய்யான பிரசாரங்களை மற்றும் காணொலிகளை வெளியிடுதல் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் படத்தை பேஸ்புக்கில் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், இணுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-26)

## கொட்டிய...

நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. நெல் வழங்குவதாக உறுதியளித்திருந்த விவசாயிகள் தற்போது நெல் இல்லை என்று கூறுகின்றனர். நாம் 64 கிலோ நெல்லை 10 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்ளளவு செய்யவும் தயாராக இருக்கின்றோம். ஆனால் விவசாயிகள் நெல் இல்லை என்று கூறுகின்றனர். நெல் இல்லாமல் அரிசி ஆலைகளைத் திறந்து வைத்திருப்பதில் பயன் இல்லை. நெல் தட்டுப்பாட்டால் 75 வீத அரிசி ஆலைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பல்பொருள் அங்காடி உரிமையாளர்கள் அரிசிக்குக் கோரிக்கை விடுத்துள்ளபோதும், அவற்றை வழங்க முடியாதுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அன்னலிங்கம் செந்தில்குமரேசன்

(வலி வடக்கு இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்)



தோற்றம் 29.05.1960 மறைவு 01.12.2024

யாழ்ப்பாணம் தாவடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் செந்தில்குமரேசன் அவர்கள் 01.12.2024 (ஞாயிற்றுக்கிழமை) அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலிங்கம் (ADR)- பரமேஸ்வரி (திரவியம்) தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம்-பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் கௌரிதேவியின் அன்புக் கணவரும் டிலக்சன் (Northern Central Hospital), சுவாதிகன், சுவாரகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி (London), கௌரி (London), ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இலங்கரத்தினம் (London), குகசேனன் செட்டியார் (London), கௌரிகுமாரன், சசிகுமாரன், சசிகலா, ரசிகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2024 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**"கணேசன் கருணை"**
**தாவடி மானிப்பாய் வீதி,**
**பிள்ளையார் கோவிலடி,**
**தாவடி.**

தகவல்:
குடும்பத்தினர்

(CR 43060) P-1

# ஆறாத் துயரில் ஏழாண்டு நினைவில்...



தோற்றம் 15.12.1944

மறைவு 19.11.2017

## அமரர் பொன்னர் சின்னையா

(Honda இராசு)

(பிரபல புகையிலை வர்த்தகரும், அன்னதான புருஷரும், யோகாஸ் ஐஸ்கிறீம், எரிபொருள் நிரப்பு நிலையம் - மந்திகை, PS ஸ்தாபனம் ஆகியவற்றின் ஸ்தாபகரும், பழவத்தை காளி அம்பாள் ஆலய அறங்காவலரும், வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய திருவிழாக்கால அன்னதான பெரும் பணியை முன்னின்று நடத்தியவரும்)

**திதி: துதிகை வளர்பிறை (02.12.2024) திங்கட்கிழமை**

எங்கள் அன்புத் தெய்வமே ஐயா!
எமை விட்டுப் பிரிந்து ஏழாண்டு ஆனதே...!
நீங்கள் அருகில் இல்லையென்ற வேதனை
எமை வாட்டுதையா...!

எத்தனை செல்வங்கள் இருந்தும்
நீங்கள் அருகில் இல்லையென்ற வேதனை தான் அதிகம் ஐயா...!
துன்பங்கள் வரும் போதெல்லாம்
துயர் துடைக்க ஓடி வருவீர்...!
இன்றோ எமைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்...!

கொண்டா ராசு என்று
ஊரிலுள்ளோர் செல்லமாக அழைப்பாரே...!

பழவத்தை காளியம்மன் ஆலய
அறங்காவலராய்
பவனி வந்தவரே...!
அன்பின் உருவம் நீர்...!
அன்னதான புருஷர் நீர்...!
ஏழைகளுக்கு வாரி வழங்குவதில் வள்ளலும் நீர்...!
புகையிலை வர்த்தகத்திலே புகழ் பெற்றவராய் இருந்தீர்...!
ஊருக்கே அன்னமிட்ட கைகள்-இன்று
உறங்கிப் போனதே...!



எங்கள் நெஞ்சங்களிலே
நீங்காத தெய்வமாய் வீற்றிருக்கின்றீர்...!

உங்கள் நினைவுகளுடனே
என்றும் நாம் வாழ்ந்து கொண்டே
இருக்கின்றோமே ஐயா...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பழவத்தை காளி அம்பாளை மனதார வேண்டி
நிற்கின்றோம்...!

பழவத்தை,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

உங்கள் நினைவில் என்றும்
**யோகன் குடும்பம்**
யோகாஸ் ஐஸ்கிறீம் (Swiss)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.